***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 56/2022 – P.W.4 (LW4)***

| | |
|---|---|
| *Name* | ராஜேந்திரன் |
| *Father/Husband's Name* | வடுவூ |
| *Village* | ஆலாத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *60* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.03.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் ஆலாத்தூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன முருகையன் எனது தம்பி ஆவார். அ.சா.1 ராகுல் இறந்துபோன முருகையனின் மகன் ஆவார்.

2. கடந்த 12.09.2019 ம் காலை 10.30 மணியளவில் எனது தம்பி முருகையன் அவரது சைக்கிளில் விக்கிரபாண்டியத்திற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தார். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருச்சக்கர வாகனம் எனது தம்பி முருகையன் மீது மோதிகிடந்தது. அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் பிரபாகரன். அவர தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். (சாட்சி அடையாளம் காட்டுகிறார்) நான் எனது வீட்டின் கொல்லையிலிருந்தபோது, சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது எனது வீட்டிலிருந்து 10 அடி தூரத்தில் இருக்கும் ரவிச்சந்திரன் வீட்டருகே முருகையன் அடிப்பட்டு கீழே விழுந்துகிடந்தார். அதில் எனது தம்பி முருகையகனுக்கு நெற்றி மற்றும் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டு இரத்தம் ஊற்றிக்கொண்டிருந்தது. பின்னர் ஊர்க்காரர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். 108 ஆம்புலன்சிற்கும் போலிசாருக்கும் ஊர்க்காரர்கள் தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தார்கள். பின்னர்

108 ஆம்புலன்சில் காயம்பட்ட எனது தம்பி முருகையனை நான், குமாரசாமி, ராகுல் ஆகியோர்கள் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். மருத்துவர் எனது தம்பியை பரிசோதனை செய்து இறந்துவிட்டதாக தகவல் கூறினார். பின்னர், இறந்துபோன முருகையன் மகன் ராகுல் என்பவர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னர் போலிசார் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வந்து எனது தம்பியின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்கு பின் எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கில் காயம்பட்டு இறந்துபோன நபர் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் - சரிதான். எனது வீடு ஆலாத்தூர் பெருமாள் கோவில் தெருவில் உள்ளது என்றால் - சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின்போது நான் எனது வீட்டு கொல்லைப்புறத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் - சரிதான். ராகுல், குமாரசாமி ஆகியோர்கள் சத்தம் போட்டுக்கொண்டு போய் பார்த்தபோது நானும் சென்றேன் என்றால் - சரிதான்.

2. நான் சென்று பார்க்கும்போது இருவரும் அடிப்பட்டு கீழே கிடந்தார்கள் என்றால் - சரிதான். சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன் என்றால் - சரிதான். விபத்து நடந்து 2 நிமிடங்களில் சென்று பார்த்திருப்பேனா என்றால் - விபத்து நடந்து முடிந்து 5 நிமிடங்கள் கழித்து சென்றேன்.

3. விபத்து இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். வழக்கு சம்பவத்திற்கு ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையோ கவனக்குறைவோ எந்த விதத்திலும் காரணமல்ல என்றால் - சரியல்ல. வழக்கில் காயம்பட்டு இறந்துபோன நபர் எனது உடன் பிறந்த சகோதரர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT*
*Mannargudi*
*CC.No. 56/2022 – P.W.5 (LW5)*

| | |
|---|---|
| *Name* | ரவிச்சந்திரன் |
| *Father/Husband's Name* | சின்னையன் |
| *Village* | ஆலாத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 58 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.03.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் ஆலாத்தூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன முருகையனை தெரியும். அ.சா.1, 2, 4 ஆகியோர்களை தெரியும்.

2. கடந்த 12.09.2019 ம் தேதியன்று காலை சுமார் 10.00 – 11.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது முருகையன் அவரது சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தார். அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருச்சக்கர வாகனம் முருகையன் மீது மோதி சத்தம் கேட்டது. சத்தம் கேட்டவுடன் நான் சென்று பார்த்தபோது அங்கு முருகையன் மகன் ராகுல், ராஜேந்திரன், குமாரசாமி ஆகியோர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள். சைக்கிளிலிருந்து முருகையன் கீழே விழுந்துகிடந்தார். முருகையனும் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த பிரபாகரனும் (சாட்சி அடையாளம் காட்டுகிறார்) கீழே விழுந்துகிடந்தார்கள். அதில் முருகையனுக்கு தலை மற்றும் நெற்றி பகுதியில் அடிப்பட்டு இரத்தம் வந்துக்கொண்டிருந்தது. பிரபாகரனுக்கு எங்கேயும் காயமில்லை. பின்னர் சம்பவ இடத்திற்கு ஆம்புலன்சும் போலிசாரும் வந்தார்கள். பின்னர் காயம்பட்ட முருகையனை 108 ஆம்புலன்சில் அவரது மகன் ராகுல், ராஜேந்திரன், குமாரசாமி ஆகியோர்கள் திருவாரூர அரசு மருத்துவ கல்லூரி

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பரிசோதித்த மருத்துவர் முருகையன் இறந்துவிட்டதாக சொன்னார் என்று நான் கேள்விபட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இறந்துபோன முருகையன் எனது உறவினர் என்றால் - சரிதான். எனது வீடு ஆலாத்தூர் பெருமாள் கோவில் தெருவில் உள்ளது என்றால் - சரிதான். விபத்து ஏற்பட்டு சத்தம் கேட்டுதான் போய் பார்த்தேன் என்றால் - சரிதான்.

2. நான் போய் பார்த்தபோது கூட்டம் கூடிவிட்டது என்றால் - சரிதான். விபத்து குறித்து கேள்விபட்டு வீட்டிலிருந்த நான் போய் பார்த்தேன் என்றால் - சரிதான். நான் போய் பார்த்தபோது இருவரும் அடிப்பட்டு கிடந்தார்கள் என்றால் - சரிதான்.

3. வழக்கு சம்பவத்திற்கு ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையோ கவனக்குறைவோ எந்த விதத்திலும் காரணமல்ல என்றால் - சரியல்ல. வழக்கில் காயம்பட்டு இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.